# 6. விலைகளும் கூலிகளும்

## 6.1. விலைகள்

இலங்கையின் பொதுவான விலைப் போக்குகளை அளவிடுவதற்கு நான்கு முக்கிய குறிகாட்டிகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. அவையாவன 1949/50 இல் கொழும்பிலுள்ள தொழில்சார் வகுப்பினரின் அனைத்து நுகர்வுகளையும் அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், கொழும்பு பெரும்பாகத்திலுள்ள தாழ்ந்த மட்டத்திலிருந்து 40 சதவீத குடியிருப்பாளரின் 1985/86 இன் நுகர்வுப்போக்கினை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண், 1974 இன் நிறையினை அடிப்படையாகக்கொண்ட மொத்த விலைச் சுட்டெண், நிலையான விலைகளில் மொ. தே. உற்பத்திக்கு நடைமுறை விலைகளின் மொ. தே. உற்பத்தியின் விகிதமாகப் பெறப்பட்ட மொ.தே.உ. உட்கிடை சுருக்கி என்பனவாம். பொதுவான விலை குறிகாட்டிகளாகப் பார்க்கையில், முதல் மூன்று சுட்டெண்களும் அவற்றின் பலவீனங்களையும்

அட்டவணை 6.1

ஆண்டுச் சராசரி விலை மாற்றங்கள் (%)

| | கொநுவிசு | கொபெநுவிசு | மொவிவிசு | மொதேஉவிசு |
|---|---|---|---|---|
| 1980 | 26.1 | - | 33.7 | 18.2 |
| 1981 | 18.0 | - | 17.0 | 20.6 |
| 1982 | 10.8 | - | 5.5 | 10.2 |
| 1983 | 14.0 | - | 25.0 | 14.7 |
| 1984 | 16.6 | - | 25.6 | 17.4 |
| 1985 | 1.5 | - | -15.2 | 0.8 |
| 1986 | 8.0 | - | -2.9 | 5.5 |
| 1987 | 7.7 | - | 13.4 | 6.8 |
| 1988 | 14.0 | - | 17.8 | 11.5 |
| 1989 | 11.6 | - | 9.0 | 9.7 |
| 1990 | 21.5 | 24.6 | 22.2 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | 9.2 | 11.2 |
| 1992 | 11.4 | 9.4 | 8.8 | 10.0 |
| 1993 | 11.7 | 8.4 | 7.6 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | 5.0 | 9.4 |
| 1995 | 7.7 | 3.9 | 8.9 | 8.3 |
| 1980-1984 (அ) | 16.4 | - | 18.2 | 15.8 |
| 1985-1989 (அ) | 6.8 | - | 9.9 | 5.1 |
| 1990-1994 (அ) | 12.4 | 10.1 | 9.2 | 11.5 |

மூலங்கள் : குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

(அ) சதவீத மாற்றங்கள் கேத்திர கணித சராசரிகளாகும்.

வரையறைகளையும் கொண்டிருந்தன. முழுமையான பொதுவான விலை மட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கான மிகப் பொருத்தமான குறிகாட்டி மொ. தெ. உற்பத்தி உட்கிடை விலைச்சுருக்கியேயாகும். எனினும் மொ. தே. உற்பத்தி உட்கிடை விலைச்சுருக்கி ஆண்டிற்கொருமுறையே கிடைக்கத்தக்கதாகவுள்ளது. அனைத்து நடைமுறை மற்றும் கொள்கை நோக்கங்களுக்காகவும் தனியார்துறை தொழிற்சங்கங்கள் மற்றும் அரசு என்பனவற்றினால் இலங்கையின் பணவீக்கத்தினை அளவிடுவதற்கு பரந்தளவு குறிகாட்டியாக கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மரபுவழியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 16 ஆண்டுகாலத்தைக் கருத்திற் கொள்கையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு 1980 - 1984 காலப்பகுதியில் இரட்டை புள்ளி பணவீக்க வீதங்கள் பதிவுசெய்யப்பட்டன. 1985 - 1987 காலப்பகுதி பணவீக்கவீதம் ஒற்றைப்புள்ளி மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தமையைக்காட்டியது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு உறுதியான இரட்டை புள்ளி பணவீக்கம் 1988 இன் பின்னர் மீண்டும் கவலைக்குரிய பண்பாக மாறியதுடன் அதைத் தொடர்ந்துவந்த 5 ஆண்டுக் காலப்பகுதிக்கான சராசரி பணவீக்கம் 13.6 சதவீதமாக இருந்தது. 1994 இல் பணவீக்க வீதம் குறிப்பிடத்தக்க 8.4 சதவீதத்திற்குக் குறைவடைந்து 1995 இல் 7.7 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. 1990 இன் உச்சமட்டமான 21.5 சதவீதத்திலிருந்து கடந்த ஐந்தாண்டுகளில் பணவீக்கம் வீழ்ச்சியடைந்ததுடன் 1987 பின்னர் 1995 இல் தொடர்ந்து இரண்டாவதாக ஒன்றைப்புள்ளி அதிகரிப்பினைப் பதிவு செய்தமையானது மிகக்குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். 1995 இல் கொழும்புப் பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மொ. தே. உற்பத்தி உட்கிடை விலைச்சுருக்கியும் கூட பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

1995 இல் தாழ்ந்த பணவீக்கத்தினைக் கொண்ட முக்கிய நிகழ்விற்கு குறிப்பிட்ட முக்கிய நிருவகிக்கப்பட்ட விலைகளில் ஏற்பட்ட குறைப்புக்கள் அதே போன்று பொருளாதார வளர்ச்சியில் காணப்பட்ட மிதமான உயர்ந்த வீதத்தினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு சந்தையில் அடிப்படை

அட்டவணை 6.2
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
(1952=100)

| விடயம் | நிறைகள் | சராசரி சுட்டெண் | | வருடாந்த சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப்புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1994 | 1995 | 1994 | 1995 | திசெ.1994 | திசெ.. 1995 |
| எல்லா விடயங்களும் | 100.0 | 1527.4 | 1644.6 | 8.4 | 7.7 | 4.2 | 11.5 |
| பண்டவகைப்படி | | | | | | | |
| உணவு | 61.9 | 1654.1 | 1768.1 | 8.9 | 6.9 | 3.6 | 11.2 |
| உடை | 9.4 | 795.7 | 803.9 | 1.7 | 1.0 | 0.2 | 1.4 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 4.3 | 3131.6 | 3322.4 | 14.7 | 6.1 | 1.0 | 12.9 |
| வாடகை | 5.7 | 109.8 | 109.8 | - | - | - | - |
| பல்வகை | 18.7 | 1578.7 | 1800.6 | 5.9 | 14.1 | 9.7 | 15.6 |

மூலங்கள் : குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி


நுகர்வுப் பொருட்களின் மேம்பட்ட வழங்கல் என்பன காரணங்களாகும். உயர்ந்த தீர்வைப் பாதுகாப்புக்கள் குறைக்கப்பட்டமை, பல கொள்கை அறிக்கைகளில் விலை உறுதிப்பாட்டினை பேணுவதற்கு அரசினால் தெரிவிக்கப்பட்ட வலுவான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பருவகால தளம்பல்களை மிதமாக்குவதில் அரசதுறை வர்த்தக அமைப்புக்களினால் பின்பற்றப்பட்ட ஆற்றல்மிக்க வர்த்தகக் கொள்கை என்பன 1995 இன் குறைந்த பண வீக்கத்திற்கு உதவின. எனினும் ஆண்டின் பிற்பகுதியில் பணவீக்கவீதங்கள் மேல்நோக்கிய போக்கை கொண்டிருந்தன. உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்ட கோதுமைமாவின் விலைகளின் தாக்கம் இல்லாமல் போனமை, செலாவணி வீதங்கள் விரைவாகத் தேய்வடைந்தமை, உயர்ந்தவீத நாணய விரிவாக்கம் ஆகிய அனைத்தும் 1995 இன் நான்காம் காலாண்டில் சராசரி பணவீக்க வீதம் மேல்நோக்கி அசைய காரணமாயிருந்தன. அதேபோன்று திசெம்பருக்கு திசெம்பர் அடிப்படையில் இரு நுகர்வோர் விலைச்சுட்டெண்களாலும் அளவிடப்பட்டவாறு பணவீக்கம் 1994 இன் மிகத்தாழ்ந்த அளவினைத் தொடர்ந்து 1995 இல் உயர்ந்த அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது.

முதலாந்தர சந்தை மட்டத்தில் விலைகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் ணானது விலை அதிகரிப்பு வீதம் 1994 இன் 5.0 சதவீதத்திலிருந்து 1995 இல் 8.9 சதவீதத்திற்கு விரிவடைந்தமையை எடுத்துக்காட்டியது. இவ்வாண்டுக்காலத்தில் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி விடயங்களின் விலை அதிகரிப்புக்களினால் இச்சுட்டெண் பெருமளவிற்கு உணர்வடைந்தமையை பிரதிபலித்தது. 1995 இறுதியில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களை ஒத்ததாக அமைந்து 1994 இன் வீழ்ச்சியினைத் தொடர்ந்து 17 சதவீதமாகக் காணப்பட்டது.

1994 இன் பின்னரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கோதுமைமா, பாண், மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலைக் குறைப்புக்கள் 1995 இன் பொதுவான பணவீக்கத்தின்மீது ஓரளவான தாக்கத்தினை தொடர்ந்தும் ஏற்படுத்தின. இம்மூன்று விடயங்களினதும் விலைகள் 1994 இன் நடுப்பகுதி மட்டங்களிலிருந்தும் மாற்றமுறாது இருந்திருந்தால் 1995 இல் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் உயர் 9.9 சதவீதமாக இருந்திருக்கும். சாதகமான வானிலை நிலைமைகளின் விளைவாக நெல், தேங்காய், வெங்காயம் போன்ற சில முக்கிய வேளாண்மைப் பண்டங்களின் நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, பற்றாக்குறைக் காலங்களில் முக்கிய உணவுப் பண்டங்களின் இறக்குமதி என்பன இவ்வாண்டுக்காலத்தில் விலை அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருந்த ஏனைய காரணிகளாகும். அக்காரணிகளின் காரணமாக பொதுவாக ஆண்டின் இறுதியில் அவதானிக்கப்படும் பருவகால உயர்விலைகள் 1995 இல் காணப்படவில்லை.

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

இவ்வாண்டில் கொ. நு. வி. சுட்டெண்ணின் நடத்தை பருவகாலத் தன்மையை ஓரளவு பிரதிபலித்தது. பருவகால உற்பத்திகளுடன் இணைந்த விதத்தில் 1995 பெப்புருவரி – மாச்சுக் காலப்பகுதியில்




வரைபடம் 6.1
கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
(1952 = 100)

(பெரும்போக அறுவடை) ஓகத்து – செத்தெம்பர் காலப்பகுதியிலும் (சிறுபோக அறுவடை) சுட்டெண் வீழ்ச்சியடைந்தது. 1995 செத்தெம்பரிலிருந்து விரைவான வேகத்தில் விலைகள் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டில் நிருவகிக்கப்பட்ட விலைக் குறைப்புக்களின் தாக்கமும் கோதுமை மாவின் உதவிக் கொடுப்பனவு ஓரளவு படிப்படியாக அகற்றப்பட்டமையும் காரணங்களாகும்.

சுட்டெண்ணின் மிக முக்கியவகையாகவுள்ள உணவுவகை, முன்னைய ஆண்டின் 8.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் 6.9 சதவீதங்கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1994 இன் பின்னரைப்பகுதிவரையில் மிகக்கூடியளவிற்கு குறைக்கப்பட்ட கோதுமைமா, பாண் என்பனவற்றின் விலைகள் அதன் பின்னர் 1995 செத்தெம்பரிலிருந்து நவெம்பர்வரை கோதுமைமா, பாண் என்பனவற்றின் விலைகள் 1995 செத்தெம்பர் பின்னரைப்பகுதியில் குறைவாகவே விளங்கின. அதன் பின்னர் 1995 செத்தெம்பரிலிருந்து நவெம்பர்வரை கோதுமைமா, பாண் என்பனவற்றின் விலைகள் ரூ. 7.95 இலிருந்தும் ரூ. 3.50 இலிருந்தும் முறையே ரூ. 11.95 இனையும் ரூ. 5 இனையும் அடைந்தன. 1995 இன் குறிப்பிடத்தக்க காலப்பகுதியில் நிலவிய கோதுமை மாவினதும் பாணினதும் குறைந்த விலைகள் அரிசியின் விலை அதிகரிப்புக்களைக் குறைப்பதன்மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்டிருந்தன. அவற்றுடன் இணைந்து நெல்லின் உச்சமட்ட அறுவடையும் இவ்வாண்டில் அரிசி விலைகள் தாழ்வாக இருப்பதற்கு உதவின. தேங்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற ஏனைய பல முக்கிய உணவு விடயங்களின் விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1995 இல் வீழ்ச்சியடைந்தன. தேங்காய், வெங்காயம் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்திகளின் காரணமாக ஏற்பட்ட உயர்ந்த நிரம்பல் இவ்விடயங்களின் விலைகள் வீழ்ச்சியடையப் பொறுப்பாக இருந்தவேளையில் சந்தையில் இறக்குமதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தமை உருளைக்கிழங்கின் விலைகள் வீழ்ச்சியடையப் பொறுப்பாக இருந்தன. அதிகரித்த நிரம்பலின் காரணமாக 1995 இன் தொடக்கத்தில் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்த உடன்மீன்களின் விலைகள் அதன்பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மோதல்கள் மீண்டும் தொடங்கியமை மற்றும் வெளிச்சத்தின் மூலமான மீன்பிடியை தடைசெய்தமை என்பனவற்றின் காரணமாக, கணிசமாக உயர்வடைந்தன. இவ்வாண்டுக்காலத்தில் பெரும்பாலான மரக்கறி வகைகள் இறைச்சி, பயறு, என்பனவற்றின் விலைகளும் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தன.

எரிபொருள் மற்றும் வெளிச்சவகையில் விலைகள் 1994 இன் 14.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் 6.1 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1994 இன் பிற்பகுதியல் குறைக்கப்பட்ட மண்ணெண்ணெய் விலை 1995 முழுவதும் மாற்றமின்றியிருந்தது. இதன் காரணமாக இந்தவகையினது விலைகள் உயராது காணப்பட்டன. இவ்வாண்டின் மின்வலு மீதான தீர்வைகளும் மாற்றமின்றியிருந்தன. விறகின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே எரிபொருள், வெளிச்சவகையினது விலைகளின் அதிகரிப்பிற்கு முக்கிய உதவுக்காரணியாக அமைந்தது.

ஆடைகள் வகையில், 1994 இனைப் போன்றே சார்புரீதியில் விலைகள் உறுதியாக இருந்தமைக்கு உள்நாட்டுச் சந்தையில் முன்னேற்றமடைந்த வழங்கல் நிலைமை காணப்பட்டமையே காரணமாகும். எனினும் பல்வகைத் தொகுதியின் விலைகள் இவ்வாண்டில் 14.1 சதவீதத்தினால் மிகக்கூடுதலாக உயர்வடைந்தன. வெற்றிலை பாக்கு, செய்தித்தாள்கள், சலவைக் கட்டணங்கள் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே பல்வகைத்தொகுதியின் விலைகள் உயர்வடைவதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

### கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்

கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கு மாற்றாக குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக் களத்தினால் 1989 இலிருந்து கணிக்கப்பட்டது. இச்சுட்டெண் கொ. நு. வி. சுட்டெண்ணிலும் பார்க்க பரந்தளவு புவியியல் பரப்பையும் விடயங்களையும் உள்ளடக்கியிருந்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே 1995 இலும் கொ. பெ. நு. விலைச்சுட்டெண் கொ. நு. வி. சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கள

## அட்டவணை 6.3
## கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்
## (சனவரி - யூன் 1989 = 100)

| விடயம் | நிறைகள் | சராசரி சுட்டெண் | | ஆண்டுச் சராசரிச் சதவீத மாற்றங்கள் | | புள்ளிக்குப்புள்ளி சதவீத மாற்றங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1994 | 1995 | 1994 | 1995 | திசெ.1994 | திசெ. 1995 |
| எல்லா விடயங்களும் | 100.0 | 172.6 | 179.3 | 4.8 | 3.9 | 1.4 | 7.5 |
| பண்டவகைப்படி | | | | | | | |
| உணவும் குடிபானமும் | 69.3 | 179.1 | 183.2 | 4.0 | 2.3 | - | 6.6 |
| குடிவகை, புகையிலை மற்றும் வெற்றிலை பாக்கு | 3.8 | 194.9 | 228.7 | 8.2 | 17.3 | 9.9 | 20.8 |
| வீடமைப்பு | 8.9 | 109.5 | 109.7 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 5.4 | 184.8 | 200.5 | 17.0 | 8.5 | 6.2 | 13.1 |
| ஆடையும் காலணியும் | 2.8 | 197.8 | 210.5 | 3.9 | 6.4 | 5.6 | 4.2 |
| தனியார் கவனிப்பும் நலப் பணிகளும் மற்றும் வீட்டுப் பொருட்களும் | 4.9 | 165.3 | 182.7 | 6.7 | 10.5 | 5.0 | 16.5 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 2.8 | 164.3 | 167.6 | 0.5 | 2.0 | - | 2.3 |
| பல்வகை | 2.1 | 149.9 | 162.9 | 11.6 | 8.7 | 16.0 | 5.0 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

விற்கு குறைந்த அதிகரிப்பினையே காட்டியது. இதற்கு இவ்விரு சுட்டெண்களினதும் நிறைகளின் ஒவ்வாமையிலுள்ள வேறுபாடுகளே காரணமாகும். 1994 இன் 4.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கொ. பெ. நு. வி. சுட்டெண் 1995 இல் 3.9 சதவீதங்கொண்ட அதிகரிப்பினை மட்டுமே பதிவுசெய்தது.

கொ. பெ. நு. விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு 1995 இல் உணவுவிலைகள் கொ. நு. வி. சுட்டெண்ணினால் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 2.3 சதவீதத்தினால் அதிகரித்தன. தானிய விடயங்களில் பொ. பெ. நு. வி. சுட்டெண், கொ. நு. வி. சுட்டெண்ணிலும் பார்க்க சார்புரீதியில் உயர்ந்த நிறையைக் கொண்டுள்ள வேளையில் பின்னைய சுட்டெண் காய்கறிகள், மீன்போன்ற விடயங்களுக்கு உயர்ந்த நிறைகளைக் கொண்டிருந்ததுடன் இது 1995 இல் மிக்கூடியளவு விலை அதிகரிப்புக்களைக் பதிவுசெய்தது. நிறைகளிலுள்ள இவ்வேறுபாடுகள் இவ்வாண்டில் இரு சுட்டெண்களும் வேறுபட்ட அதிகரிப்பு வீதங்களைப் பதிவு செய்தமைக்குப் பொறுப்பாக இருந்தன. இருந்துங்கூட 1995 இல் இவ்விரு சுட்டெண்களாலும் எடுத்துக்காட்டப்பட்ட போக்குகள் ஒரே திசையிலேயே காணப்பட்டன.

1995 இல் வெறியக் குடிவகை, புகையிலை, வெற்றிலை, பாக்கு வகைகளின் விலைகள் முன்னைய ஆண்டின் 8.2 சதவீதங்கொண்ட மிகத்தாழ்ந்த அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 17.3 சதவீதத்தினால் உயர்வடைந்தன. ஆடைகள் மற்றும் காலணி, தனியாள் கவனிப்பு மற்றும் நலப்பணிகள், வீட்டுப்பொருட்கள் மற்றும் பணிகள், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்கள் ஆகியவைகளின் விலைகள் 1994 உடன் ஒப்பிடுகையில் 1995 இல் விரைவாக அதிகரித்தன. மாறாக 1995 இல் எரிபொருள் மற்றும் வெளிச்சம், பல்வகைத்தொகுதி ஆகிய வகைகளின் விலைகள் குறைந்தளவு அதிகரிப்புக்களையே பதிவு செய்தன.

### மொத்த விற்பனை விலைச்சுட்டெண்


மொத்த விற்பனை விலைச்சுட்டெண் முதலாந்தரச் சந்தையில் விலைகளின் அசைவினை அளவிடுகின்றது. இச்சுட்டெண்ணின் போக்கு தேயிலை, இறப்பர், தெங்குபோன்ற சுட்டெண்களின் கணிசமான நிறையைக் கொண்டுள்ள முக்கிய முதலாந்தர ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் பெரும் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. மொ. வி. வி. சுட்டெண் 1994 இன் 5.0 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் 8.9 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வீதத்தில் உயர்வடைந்தது. 1995 இல் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய ஏற்றுமதிகளில் குறிப்பாக தேயிலை இறப்பர் என்பனவற்றின் விலைகளிலும் இறக்குமதி விலைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பிரதிபலித்தது. மொ. வி. வி. சுட்டெண்ணின் பண்டவகையான துணைத்தொகுதிகளில் உணவு, பல்வகை உற்பத்திகள், இரசாயனம், இரசாயன உற்பத்திகள் மற்றும் எரிபொருள், வெளிச்சவகைகள்

இவ்வாண்டில் சுட்டெண் அதிகரிப்பதற்குப் பெரும் பொறுப்பாக இருந்தன. எனினும் பொதுவான சுட்டெண் விலைகளில் விரைவான போக்கினைக் காட்டியபோதிலும் உள்நாட்டுத்தொகுதி விலைகளில் வீழ்ச்சிப் போக்கினைக் காட்டிய நுகர்வோர் சுட்டெண்களின் போக்குடன் ஒத்துச்செல்லும் போக்கினைக் கொண்டிருந்தமை கவனிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும்.


உணவுதுணைவகை முன்னைய ஆண்டின் 1.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கெதிராக 1995 இல் 5.7 சதவீதங்கொண்ட மிதமான விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. தேயிலையின் விலையில் ஏற்பட்ட முன்னேற்றம் உணவுத் தொகுதிக்கான விலைகளில் ஏற்பட்ட விரைந்த அதிகரிப்புக்கும் பொறுப்பான முக்கிய காரணியாக இருந்தது. வெறியக் குடிவகை புடவைகள் மற்றும் காலணிகள் அத்துடன் போக்குவரத்துக்கருவிகள், தாள் உற்பத்திப் பொருட்கள், இரசாயனம் இரசாயன உற்பத்திப் பொருட்கள் ஆகிய துணைத்தொகுதிகளின் விலைகள் இவ்வாண்டில் விரைந்து அதிகரித்தன. குறிப்பாக வளமாக்கி விலைகளில் செய்யப்பட்ட திருத்தம் இரசாயன உற்பத்திகள் வகையின் விலைகளினது உயர்வில் தாக்கத்தை ஏற்படுத்தின. எரிபொருள், வெளிச்சவகை மற்றும் பல்வகைத்தொகுதி வகையின் விலைகள் சார்பு ரீதியில் 1994 இல் வீழ்ச்சியடைந்தபோதும் 1995 இல் முறையே 21.4 சதவீத, 19.3 சதவீத கணிசமான அதிகரிப்புக்களைத் தொடர்ந்தும் காட்டின. இறப்பர், விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பல்வகைத் தொகுதிவகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய உதவுக்காரணியாக இருந்தவேளையில் விறகின் உயர்ந்த விலைகள் எரிபொருள் வெளிச்சவகையில் ஏற்பட்ட உயர்விற்குத் தொடர்ந்தும் உதவின.

துறைவாரியான பகுப்பாய்வின்படி, கடந்த ஆண்டில் 13.0 சதவீதத்தினால் உயர்வடைந்த உள்நாட்டுத்தொகுதியின் விலைகள் 1995 இல் சார்புரீதியில் குறைந்த வீதத்தில் 7.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டில் 4.5 சதவீதத்தினால் அதிகரித்த இறக்குமதிவகைகளின் விலைகள் 1995 இல் மேலும் 10.5 சதவீதத்தினால் அதிகரித்தன. கோதுமைத்தானியத்தின் விலை அதிகரிப்பு இறக்குமதி வகைகளின் விலை அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணமாகும். ஏற்றுமதி வகையின் விலைகள் 1994 இல் பதிவுசெய்யப்பட்ட 5.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்குப் பெருமளவு மாறாக 1995 இல் 10.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

வரைபடம் 6.2
கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்
(சனவரி - யூன் 1989 = 100)




வரைபடம் 6.3
மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
(1974 = 100)




முடிவுப்பயன்பாட்டுப் பகுப்பின்படி, நுகர்வுப்பொருட்களின் விலைகள் முன்னைய ஆண்டின் 0.6 சதவீதங்கொண்ட சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.9 சதவீதத்தினால் உயர்வடைந்தன. கடந்த ஆண்டில் 17.7 சதவீதத்தினால் மிக அதிகளவில் உயர்வடைந்த இடைநிலைப் பொருட்களின் விலைகள் 1995 இல் மேலும் 14.3 சதவீதத்தினால் உயர்வடைந்தன. முதலீட்டுப் பொருள்வகை 10.1 சதவீதத்தினால் அதிகரித்த தெனினும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 16.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மெதுவானதாக இருந்தது.

## 6.2 கூலிகள்

1995 இல் அரசு, தனியார் துறை இரண்டிலும் முனைப்பான கூலி அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. 1994 இலும் 1995 இலும் பணவீக்கம் மிதமாக்கப்பட்டதன் காரணமாக பலதுறைகளிலுள்ள வேலையாட்கள் உண்மைக் கூலிகளில் அதிகரிப்பினைப் பெற்றனர்.

## அட்டவணை 6.4
## தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சில்லறை விற்பனை விலைகள் (தீவு முழுவதும்)

| விடயம் | அலகு | விலைகள் ரூபாய்களில் 1993 | 1994 | 1995 | சதவீத மாற்றம் 1994 | 1995 |
|---|---|---|---|---|---|---|
| அரிசி (சாதாரண புழுங்கல்) | ரூ./கி.கி. | 16.48 | 15.85 | 16.11 | -3.8 | 1.6 |
| பாண் 450 கிறாம் | ரூ./இறா. | 4.83 | 4.66 | 3.81 | -3.5 | -18.2 |
| முட்டை (சாதாரணம்) | ரூ./ஒன்று | 2.74 | 2.95 | 3.28 | 7.7 | 11.2 |
| தேங்காய் (நடுத்தர அளவு) | ரூ./காய் | 7.29 | 6.04 | 5.45 | -17.1 | -9.8 |
| காய்கறி | | | | | | |
| பாகற்காய் | ரூ./கி.கி. | 19.7 | 24.91 | 26.7 | 26.4 | 7.2 |
| முட்டைக்கோஸ் | ரூ./கி.கி. | 17.63 | 21.68 | 24.87 | 23.0 | 14.7 |
| கரட் | ரூ./கி.கி. | 23.88 | 30.93 | 33.6 | 29.5 | 8.6 |
| போஞ்சி | ரூ./கி.கி. | 22.75 | 28.97 | 30.01 | 27.3 | 3.6 |
| லீக்ஸ் | ரூ./கி.கி. | 24.53 | 30.49 | 33.44 | 24.3 | 9.7 |
| உருளைக்கிழங்கு | ரூ./கி.கி. | 44.64 | 52.04 | 47.57 | 16.6 | -8.6 |
| சின்ன வெங்காயம் | ரூ./கி.கி. | 37.9 | 49.61 | 40.34 | 30.9 | -18.7 |
| செத்தல் மிளகாய் (தரம் 1) | ரூ./கி.கி. | 119.99 | 110.61 | 122.28 | -7.8 | 10.6 |
| கடல் மீன் | | | | | | |
| கலவல்ல | ரூ./கி.கி. | 107.4 | 112.25 | 128.69 | 4.5 | 14.6 |
| மலட் | ரூ./கி.கி. | 75.66 | 86.66 | 92.87 | 14.5 | 7.2 |
| குறுள்ளோ | ரூ./கி.கி. | 64.44 | 68.97 | 72.63 | 7.0 | 5.3 |
| சாளை | ரூ./கி.கி. | 48.55 | 50.00 | 53.59 | 3.0 | 7.2 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அரசதுறையில் பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பளங்கள் கணிசமாக அதிகரித்தன. அத்துடன் ஏனைய பல வகைகளிலுள்ள ஊழியர்களின் சம்பளங்களும் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. நன்கமைந்ததனியார்துறையில், இவ்வாண்டில் பல கூலி நிர்ணய சபைகள் தமது ஆகக்குறைந்த கூலிகளைத் திருத்திக்கொண்டன. நன்கமையாத துறையில் கட்டிடங்களின் கட்டவாக்கம், சிறுஉடைமைப் பயிர்ச்செய்கை போன்ற பெரும்பாலான நடவடிக்கைகளிலுள்ள பெயரளவுக்

## அட்டவணை 6.5
## மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் 1994 | 1995* | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் 1994 | 1995 | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் திசெ. 1994 | திசெ.1995 |
|---|---|---|---|---|---|---|---|
| **எல்லா விடயங்களும்** | 100.0 | 873.4 | 950.7 | 5.0 | 8.9 | 1.8 | 17.0 |
| **பண்டவகைப்படி** | | | | | | | |
| உணவு | 67.8 | 760.4 | 803.9 | -1.3 | 5.7 | -4.3 | 22.3 |
| வெறிக் குடிவகை | 2.86 | 969.2 | 1,101.2 | 1.4 | 13.6 | - | 16.6 |
| புடவை, காலணிகள் | 4.02 | 482.9 | 577.2 | 6.8 | 19.5 | 4.0 | 22.7 |
| தாள் உற்பத்திகள் | 1.37 | 761.6 | 948.0 | 2.2 | 24.5 | -0.1 | 45.9 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் | 5.16 | 550.4 | 636.3 | 1.5 | 15.6 | 3.4 | 13.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 6.42 | 1,295.0 | 1,314.8 | 4.4 | 1.5 | -7.7 | 8.9 |
| உலோகமல்லா உற்பத்திகள் | 1.78 | 1,896.1 | 2112.6 | 21 | 11.4 | 14.3 | 9.3 |
| உலோக உற்பத்திகள் | 0.93 | 698.2 | 698.7 | 5.9 | 0.07 | 0.1 | 0.2 |
| போக்குவரத்து கருவிகள் | 0.80 | 682.2 | 844.6 | 3.4 | 23.8 | 5.8 | 27.4 |
| மின்கருவிகளும் வழங்கல்களும் | 0.96 | 691.8 | 752.9 | 8.9 | 8.8 | 10.2 | 6.6 |
| பொறி | 1.33 | 547.0 | 580.0 | 11.0 | 6.0 | 6.3 | 4.5 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 1.79 | 1,739.3 | 2,112.2 | 33.0 | 21.4 | 44.2 | 8.6 |
| பல்வகை | 4.78 | 2,050.5 | 2,446.5 | 38.5 | 19.3 | 31.3 | 2.9 |
| **துறைவகைப்படி எண் I** | | | | | | | |
| உள்நாட்டு வகை | 50.31 | 833.6 | 894.6 | 13.0 | 7.3 | 8.6 | 9.0 |
| இறக்குமதி வகை | 27.17 | 702.0 | 775.7 | 4.5 | 10.5 | -5.8 | 24.1 |
| ஏற்றுமதி வகை | 22.52 | 1,169.1 | 1,287.3 | -5.4 | 10.1 | -3.0 | 23.0 |
| **துறைவகைப்படி எண் II** | | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் | 75.3 | 818.8 | 875.3 | 0.6 | 6.9 | -1.6 | 19.4 |
| இடைநிலைப் பொருட்கள் | 20.52 | 1,029.1 | 1,176.4 | 17.7 | 14.3 | 10.6 | 12.0 |
| முதலீட்டுப் பொருட்கள் | 4.18 | 1,094.8 | 1,205.0 | 16.7 | 10.1 | 11.5 | 7.8 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கூலிகள் பணவீக்க வீதத்திலும் பார்க்கக் கூடுதலாக உயர்வடைந்தமையினால் உண்மைக்கூலிகள் அதிகரித்தன.

### அரசதுறை

இலங்கை ஆசிரியர் பணி நிறுவப்பட்டதன் பின்னர் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பளங்கள் நீண்டகாலமாகத் தேவைப்பட்டிருந்த சீராக்கங்களுக்கு இடமளிக்கும் வகைகளில் 1995 சனவரி 1 ஆம் நாளிலிருந்து கணிசமாக திருத்தப்பட்டன. இதனை 1995 இல் அரசதுறைக் கூலி அமைப்பில் மிகக்குறிப்பிடத்தக்கதொரு அபிவிருத்தியாகக் கருதப்படமுடியும். இவ்வாண்டில் அரசதுறைக் கூலிகளின் ஏனைய அபிவிருத்திகளாக சனவரியிலிருந்து தொழில்நுட்பவியலாளர் தரத்தில் வகுப்பு 1 தரம் 1 மற்றும் தொழிலாளர் தரத்தில் வகுப்பு 1 தரம் 11 ஆகியவற்றின் சம்பள அளவுகள் மேல் நோக்கித்திருத்தப்பட்டமை, பொறியிலாளர்கள், விலங்கு வைத்தியம், வேளாண்மை போன்ற பணிகளுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் படிகள் அவற்றிற்குச் சமமான ஏனைய முகாமைத்துவ பணிகளுக்கும் (யூலையிலிருந்து) வழங்கப்பட்டமை சிற்றூழியர் தரங்கள், உந்துஊர்திகள் ஓட்டுநர்கள் ஆகியோரின் சம்பள அளவுகள் திருத்தப்பட்டமை, 1995 நவெம்பரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அரசதுறை சம்பள அமைப்பில் மேலும் காணப்பட்ட முரண்பாடுகளைச் சீர்செய்தமை என்பன விளங்கின.

அரச பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கான கூலிவீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு, அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள அளவுகளின் திருத்தம் அவர்களது பெயரளவு கூலிகளை 1995 இல் முன்னெப்பொழுதுமில்லாதவாறு 27.7 சதவீதத்தினால் உயர்த்தியது. இதனை இவ்வாண்டிற்கான 7.7 சதவீதம் கொண்ட பணவீக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு கொ. நு. வி. சுட்டெண்ணிற்கு சீராக்கஞ் செய்யப்பட்ட வேளையில் உண்மைக்கூலிகள் 18.6 சதவீதத்திற்கும் கூடுதலாக உயர்வடைந்தன. ஒப்பிடுகையில் 1995 இல் அனைத்து அரச ஊழியர்களுக்குமான கூலிவீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 8.9 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 7.7 சதவீதத்தினால் உயர்வடைந்தமையின்மூலம் பொதுவான உண்மைக்கூலி நிலைமை மாற்றமின்றியிருந்தது. அவ்வகையில் நிறைவேற்றுத்தரமல்லா அலுவலர்களின் கூலிகள் முன்னைய ஆண்டின் 11.3 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.2 சதவீதத்தினால் மெதுவாக வளர்ச்சியடைந்தது. எனினும் 1995 இல் நிறைவேற்றுத்தரமல்லா அலுவலர்களின் உண்மைக் கூலிகள் தொடர்ந்தும் 0.5 சதவீதமாகவே இருந்தன. சிற்றூழியர்களின் கூலிகள் 7.2 சதவீதத்தினால் உயர்வடைந்து முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.0 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாக இருந்தது. எனினும் உண்மை நியதிகளில் சிற்றூழியர்களின் கூலிகள் 1995 இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

### தனியார்துறை

1995 இல் கூலி நிர்ணயசபையினால் உள்ளடக்கப்பட்ட வேலையாட்களின் கூலி அமைப்பில் பல அபிவிருத்திகள் காணப்பட்டன. தொழிற்பாட்டிலுள்ள 34 கூலிநிர்ணய சபைகளில் 22 சபைகள் அவர்களின் கீழுள்ள வர்த்தகங்களின் ஆகக்குறைந்த கூலிகளை உயர்த்தியுள்ளன. இத்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள் ஆகக்குறைந்த கீழ் மட்டச் சம்பளத்தை மாதமொன்றிற்கு ரூ. 2,000 வரையில் உயர்த்துவதேயாகும். ஆகக்குறைந்த கூலிகளை உயர்த்திய வர்த்தகங்கள் பீடித் தயாரிப்பு, கட்டடவாக்கம், பிஸ்கட் மற்றும் இனிப்புத் தயாரிப்பு, மொத்த மற்றும் சில்லறை விற்பனை, பொறியியல், அப்பமனை, பாதுகாப்புப்பணிகள், செங்கட்டிகள் ஓடுகள் தயாரிப்பு, இறப்பர் ஏற்றுமதிகள், தோல்பதனிடல் காலணி, தெங்கு தயாரிப்பு புடவைத்தயாரிப்பு, வாயிற்காப்புப்பணிகள், சினிமா, கயிற்றுத்தும்பு மற்றும் மெத்தைத் தயாரிப்பு, பின்னல் தயாரிப்புக்கள், உந்துபோக்குவரத்து, வெறியக் குடிவகை மற்றும் விநாகிரி தயாரிப்பு, மருத்துவ மனைகள், டயர் ரியூப், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு தயாரிப்புக்கள், சுற்றுலாவிடுதி மற்றும் உணவு வழங்கல் உறைநீர்க்கட்டி மற்றும் காற்றூட்டப்பட்ட நீர் தயாரிப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வபிவிருத்திகளுக்கு மேலதிகமாக, 1994 இன் 20 உடன் ஒப்பிடுகையில் 1995 இல் 27 கூட்டு உடன்படிக்கைகள் செய்யப்பட்டமையானது கைத்தொழில் உறவுகளில் சாதகமான அபிவிருத்திகளைப் பிரதிபலித்தது.

கூலி நிர்ணய சபையிலுள்ள கூலியாட்களின் பொதுவான ஆகக்குறைந்த கூலி வீதச்சுட்டெண் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் பணவீக்கத்தினைக் கருத்திற்கொள்கையில் உண்மைக் கூலிகள் ஏறத்தாழ 3.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பொதுவாக ஆகக்குறைந்த கூலிவீதச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு மிதமாக்கப்பட்டமைக்கு அரச பெருந்தோட்டங்களில் வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு நிறுத்தப்பட்டமையே காரணமாகும். வேளாண்மையிலுள்ள வேலையாட்களின் கூலிகள்

**அட்டவணை 6.6**
**கூலிவீதச் சுட்டெண்கள்**
**(திசெம்பர் 1978 = 100)**

| | பெயரளவு | | உண்மையான | | 1995 இன் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1994· | 1995 | 1994 | 1995 | பெயரளவு | உண்மையான |
| **1 அரச ஊழியர்கள்** | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 735.5 | 792.5 | 115.4 | 115.4 | 7.7 | - |
| நிறைவேற்றுத் தரமல்லா | 692.7 | 749.4 | 108.7 | 109.2 | 8.2 | 0.5 |
| சிற்றூழியர்கள் | 772.3 | 828.1 | 121.1 | 120.6 | 7.2 | -0.4 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 595.6 | 760.5 | 93.4 | 110.8 | 27.7 | 18.6 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுமுள்ள கூலி நிர்ணய சபைகள் | 712.4 | 739.5 | 111.7 | 107.7 | 3.8 | -3.6 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 821.5 | 830.8 | 128.8 | 121.0 | 1.1 | -6.0 |
| கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர்கள் | 555.8 | 647.1 | 87.2 | 94.1 | 16.4 | 7.9 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 431.4 | 456.7 | 67.6 | 66.5 | 5.9 | -1.7 |

மூலம் : தொழிற்றிணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1.1 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தன. இதன்படி அத்துறைக்கான உண்மைக்கூலிகள் 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கைத்தொழில் மற்றும் வர்த்தகங்களிலுள்ள வேலையாட்கள் 1995 இல் 16.4 சதவீதமான மிக உயர்ந்த கூலி அதிகரிப்புக்களைப் பெற்றமை 7.9 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க உண்மைக்கூலி அதிகரிப்பினை விளைவித்தது. பணிகளிலுள்ள வேலையாட்கள் 1995 இல் மேலும் 5.9 சதவீதமான பெயரளவுக்கூலி அதிகரிப்புக்களைப் பெற்றனர். எனினும் அவர்களது உண்மைக் கூலிகள் 1.7 சதவீதத்தால் மோசமடைந்தன.

### நன்கமையாத துறை

மத்திய வங்கியின் நாடுமுழுவதற்குமான தரவுச்சேகரிப்பு முறையினூடாக நன்கமையாத துறையிலுள்ள நாளாந்தக் கூலிகள் மீதான தகவல்கள் பெறப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த நாட்டில் பரந்துள்ள கிட்டத்தட்ட 100 தரவுச்சேகரிப்பு நிலையங்களிலிருந்து நெற்செய்கையின் பலதரப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் சிறு அளவுக் கட்டவாக்கம் என்பனவற்றின் நாளாந்தக் கூலிகள் சேகரிக்கப்பட்டன.

1995 இற்கான தற்காலிகத் தரவுகளின்படி, இவ்வாண்டில் பெயரளவுக் கூலிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தவேளையில், உண்மைக்கூலிகள் பெரும்பாலும் அனைத்து முக்கிய நடவடிக்கைகளிலும் மேம்பட்டன. தச்சு வேலையாட்கள் மற்றும் கொத்தனாரின் நாளாந்தக்கூலிகள் முறையே 13 சதவீதத்தினாலும் 12 சதவீதத்தினாலும் அதிகரித்தன. தச்சு மற்றும் கொத்தனார் வேலைகளிலுள்ள உதவியாளர்களின் கூலிகள் 10 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தன. இவ்வாண்டில் நெற்செய்கையின் முக்கிய நடவடிக்கையிலுள்ள நாளாந்தக் கூலிகள் 9 - 15 சதவீத வீச்சிற்கிடையிலான வீதங்களில் உயர்வடைந்ததன் விளைவாக இந்நடவடிக்கைகளில் உண்மைக்கூலிகளில் அதிகரிப்புக்கள் பதிவுசெயயப்பட்டன. தேயிலைப் பயிர்ச்செய்கையில் பெரும்பாலான முக்கிய நடவடிக்கைகளில் நாளாந்தக் கூலிகள் 9 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தன. இறப்பர் செய்கையில் பெரும்பாலான முக்கிய நடவடிக்கைகளில் கூலிகள் 13 சதவீதத்திற்கும் பாலெடுத்தலில் உள்ள கூலிகள் 18 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்து தேர்ச்சிபெற்ற பாலெடுப்பவர்களின் பற்றாக்குறையையும், இவ்வாண்டில் இறப்பர் விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினையும் பிரதிபலித்தன.